# பிலால்

தமிழாக்கம்:

**J.S. சலீம் அஹ்மது**

வெளியிடுவோர்:

**மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்**

திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டம்

*Tamil Translation of the book*

**BILAL**


| | | |
|---|---|---|
| Translated by | : | J.S. Saleem Ahamd |
| Composed by | : | J.S. Saleem Ahamd &<br>A. Abdul Nizar |
| First Edition | : | 2019 |
| Copies | : | 1000 |
| Published by | : | Nazarat Nashr-o-Isha'at<br>Gurdaspur Dist.<br>Qadian, Punjab - 143 516. |
| Printed at | : | Raphael Printing Press<br>Tirunelveli - 627 001. |

National Toll free Number : 1800 3010 2131
Tamil Toll Free Number : 1800 425 40000

For further information please visit:
www.alislam.org
www.ahmadiyyamuslimjamaat.in/feedback

# அறிமுகம்

இச்சிறிய புத்தகம் இஸ்லாத்தின் தூய நபி (ஸல்) அவர்களின் நெருங்கிய தோழரும், நபி கரீம் (ஸல்) அவர்களால் 'முஅத்தின்' ஆக நியமனம் செய்யப்பட்டதன் பின், இஸ்லாமிய உலகில் அவ்வாறே நன்கு அறியப்பட்டவருமாகிய ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு ஆகும்.

அவர்கள் ஓர் அடிமையாக இருந்தார்கள். அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாகவே கடுமையான துன்புறுத்தலுக்கு ஆளானார்கள். அனைத்து இன்னல்களையும் கொடுமைகளையும் எந்த அளவு பொறுமையுடன் சகித்துக் கொண்டார்கள் எனில், இன்றைய நாட்களிலும், அஹ்மதி முஸ்லிம்கள் தங்களது நம்பிக்கையை வெளிப்படுத்தியதாலும், அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை; முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்று கூறியதினாலும் சில இஸ்லாமிய பழமைவாதி களினால் துன்பத்திற்கு ஆளாகும் அத்தகைய சோதனையின் வேளையில் அவர்கள் தங்களுக்கு ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைப் போன்ற மன உறுதியும் சகிப்புத் தன்மையும் தருமாறு (அல்லாஹ்விடம்) வேண்டி பிரார்த்தனை செய்கின்றனர்.

தூய நபி (ஸல்) அவர்களின் மிக நெருங்கிய நண்பர் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை விலை கொடுத்து வாங்கி விடுதலை செய்தார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டார்கள். விரைவிலேயே சிறந்ததோர் ஆன்மீக பதவிக்கு உயர்ந்தார்கள். அன்னார், அல்லாஹ்வின் உண்மையான அடியாராக இஸ்லாத்திற்குத் தொண்டாற்றியதினால், அனைத்து முஸ்லிம்களிடமும் அதிக கண்ணியமிக்கவராகத் திகழ்ந்தார்கள். இஸ்லாத்தின் இரண்டாவது கலீ∴பா ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும், அன்னாரை 'செய்யதுனா' அதாவது 'எங்கள் தலைவரே' என்று அழைத்து வந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தம்முடன் சுவர்க்கத்தில் இருப்பவர் என்ற நற்செய்தியை வழங்கியவர்களில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் ஒருவர் ஆவார்.

'சிறுவர் புத்தகக் கமிட்டி' உறுப்பினர்கள், இச்சிறிய புத்தகத்தை தயார் செய்வதற்கு உதவி புரிந்த அமத்துல் மத்தீன் சாஹிபா, ∴பௌஸியா ராஷித் சாஹிபா, மவ்லவி முனீர் அஹ்மத் ஜாவித் சாஹிப் ஆகியோருக்கு நன்றியை உரித்தாக்குகின்றனர்.

மேலும், தமது தொடர் பணிச்சுமைகளுக்கிடையில், இத்திட்டத்தில் அதிக ஆர்வம் எடுத்து, உன்னத வழிகாட்டலை வழங்கிய ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு அவர்கள் மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கின்றனர்.

எமது முந்தைய பதிப்புகளைப் போன்றே, இப்புத்தகமும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், குழந்தைகள் ஆகியோர் மத்தியில் நல்வரவேற்பை பெறும் என்று நம்புகிறோம்.

**ராஷித் அஹ்மத் சௌத்ரி**
**சேர்மன்**
**சிறுவர் புத்தகக் கமிட்டி**
**மார்ச் 20, 1991**

# ஹஸ்ரத் பிலால் (ரலி)

## ஓர் அடிமையின் பிறப்பு

பல வருடங்களுக்கு முன்னால், அரேபியா நாட்டிலுள்ள மக்காவில் ஓர் அடிமைத் தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். அவர்களது பெயர்கள் ரபா, ஹமாமா என்பதாகும். அவர்கள், இப்போது எத்தியோபியா என்றழைக்கப்படும் அபீஸீனியாவில் இருந்து இங்கு வந்தவர்கள் ஆவர். அவர்கள் அடிமைகளாக பிடிக்கப்படுவதற்கு முன்பு, அவர்கள் இருவரும் சுதந்திரமாகவே இருந்தனர். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவர்கள் அவனுக்கு 'பிலால்' எனப் பெயரிட்டனர். அவர்கள் ஒரு மகனைப் பெற்றதில் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். ஆயினும், அவர்களின் உள்ளத்தில் துக்கம் மிகுதியாக இருந்தது. ஏனெனில், பிலால் ஓர் அடிமையாகப் பிறந்துள்ளார். அன்றைய நாட்களில் இருந்து வந்த கொடிய வழக்கத்திற்கு இணங்க, அடிமைகளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் தங்களது பெற்றோர்களின் எஜமானர்களின் அடிமைகளாகவே கருதப்பட்டனர். ஒரு காலத்தில் தாங்கள் சுதந்திரமாக இருந்தது போன்று, தங்களது மகனும் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று ரபாவும் ஹமாமாவும் விரும்பினர்.

ஓர் அடிமையின் வாழ்வு என்பது மிகவும் கடினமானது. அவர் தனது எஜமானருக்கு அடிபணிந்து அவருக்காகவே வாழ்நாள் முழுவதும் உழைக்க வேண்டியிருந்தது. ஓர் அடிமை, தமது எஜமானருக்கு கீழ்ப்படியாமல் இருந்தாலோ அல்லது அவரது விருப்பத்திற்குச் சற்று மாற்றமாக ஏதேனும் செய்து விட்டாலோ, அந்த அடிமை கடுமையாகத் தண்டிக்கப்படுவார்.



ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மெலிந்த, உறுதியான, உயரமிக்க தோற்றத்துடன் வளர்ந்து வந்தார்கள். அவர்கள் கருமை நிறமுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் தமது உரத்த கணீரென்ற குரல்மூலம் பிரபல்யமாகி இருந்தார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பணிக்குச் செல்லும் வயதை அடைந்த போது, அன்னார் சந்தையில் விற்கப்பட்டார்கள். உமைய்யா பின் கா.்.ப் என்னும் மக்கத்துத் தலைவரால் அன்னார் வாங்கப்படும்வரை பல தடவை விற்கப்பட்டார்கள். அவரது புதிய எஜமானர் மிகவும் கொடியவராக இருந்தார்.

## மக்கத்துத் தலைவர்களும், இறைத் தூதர் (ஸல்) அவர்களும்

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும், மற்றுஞ்சில அடிமைகளும் கஅபா ஆலயத்தின் அருகே அமர்ந்திருந்த போது, அவர்களின் எஜமானர்கள் தமக்குள் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், அவர்களைக் கடந்து சென்றார்கள். அன்னார் வழக்கம்போல் தனிமையில் இறைவனை வணங்குவதற்காக நகரத்திற்கு வெளியே மலைக்குன்றுகள் சூழ்ந்த பகுதியை நோக்கிச் செல்வதாகத் தோன்றியது. மக்கத்து தலைவர்கள் அன்னாரை பரிகாசம் செய்தனர். உமைய்யாவும், பிற்காலத்தில் அபூஜஹில் என்று அறியப்பட்ட உமர் பின் ஹிஷாமும் அன்னார் மீது வசைமொழி கூறினர். எனினும், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அதைச் சிறிதும் பொருட்படுத்தாது மிகவும் கண்ணியமான முறையில் தமது நடையைத் தொடர்ந்தார்கள். மக்கத்து தலைவர்களில் ஒருவரான அபூசு.்.பியான் எல்லோரையும் அழைத்து, முஹம்மது (ஸல்) அவர்கள் தங்களது கடவுளர்களைக் குறித்து எதுவும்

பேசுவது நிறுத்தப்பட வேண்டும் எனக் கூறினார். மேலும் அவர், ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையான அபூலஹபிடம், அவரது சகோதரர் மகன் மீது அவரது செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்களை ஓரிறைவனைப் பற்றி போதனை செய்வதை தடை செய்ய வேண்டும் என்று கூறினார். அன்றைய நாட்களில், அரேபிய மக்கள் சிலைகளை வணங்கி வந்தனர். கஅபா ஆலயத்தினுள் 360 சிலைகள் வைக்கப பட்டிருந்ததாக கூறப்படுகிறது. அந்த கடவுளர்களுக்கு எதிராக ஏதாவது பேசப்பட்டால், அந்தக் கடவுளர்கள் கோபமடைவர்கள் என்றும், தமக்கு உதவி செய்ய மாட்டார்கள் என்றும் மக்கத்து மக்கள் எண்ணி வந்தனர்.

## ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் முஸ்லிமாக ஆனார்கள்

மக்களை இறைவன் பக்கம் திரும்பவும் கொண்டு வருவதற்காக இறைவனால் நியமிக்கப்பட்டுள்ளதாக முஹம்மது (ஸல்) அவர்கள் வாதித்த போது, மக்கத்து மக்கள் அன்னாரை ஏளனம் செய்தனர். இந்த 'புதிய நம்பிக்கையே' நகரத்தின் பேச்சாக இருந்தது. மக்கள் தமது வீடுகளில் மாலை நேரங்களில் உட்கார்ந்து, முஹம்மது (ஸல்) அவர்கள் கொண்டு வந்த புதிய தூதுச் செய்தி குறித்துக் கலந்துரையாடுவர். தமது சிலைகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதினால், அவர்கள் அன்னாரை எள்ளி நகையாடி கண்டனம் தெரிவித்தனர். மந்திரவாதி, பைத்தியக்காரர், பொய்யர் என்றும் சிலர் அழைத்தனர். (இறைவன் காப்பானாக) முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், அவர்களைப் பின்பற்றுவோர் மீதும் பலவந்தத்தை பிரயோகித்து இஸ்லாத்தை இந்த புவியின் வட்டத்திலிருந்தும் அடியோடு



துடைத்து விடுவோம் என மக்கத்துத் தலைவர்கள் எப்போதும் உரிமையுடன் கூறி வந்தனர். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களுக்கு எதிராக, மக்கள் மனதில் விஷத்தையும் துவேஷத்தையும் இவர்கள் விதைத்த போதிலும், தனிமையில் முஹம்மது (ஸல்) அவர்கள், மிகவும் அமைதியானவர் என்றும், ஏழைகள் மீது பாசமிக்கவர் என்றும், வாக்குறுதியில் உண்மையாளர் என்றும், கொடுக்கல் வாங்கலில் நேர்மையை கடைபிடிப்பவர் என்றும், நம்பத்தகுந்தவர் என்றும் அவர்கள் ஆமோதித்தனர். அவர்கள் அன்னாரது நேர்மையையும், வாய்மையையும் புகழ்ந்து போற்றினர்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் உமைய்யா வீட்டில் இப்படிப்பட்ட கலந்துரையாடல்களை அடிக்கடி செவியேற்றார்கள். மக்கத்து வீதிகளில் ஹஸ்ரத் தூயநபி (ஸல்) அவர்கள் நடந்து செல்வதை அவர்கள் கண்டிருக்கின்றார்கள். மேலும், அவர்கள் மேன்மையான மனிதர் என்றும், அடிமைகள் உட்பட எல்லோரிடத்தும் நேசத்தோடும் பாசத்தோடும் நடக்கக் கூடியவர்கள் என்றும் அறிந்திருந்தார்கள். முஹம்மது (ஸல்) அவர்கள் ஏக இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள் என்றும், படைப்பாளனாகிய இறைவன் முன் அனைத்து மக்களும் சமமானவர்களே என்றும் நம்பக்கூடியவர் என மக்கள் கூறக் கேட்டிருக்கிறார்கள். இஸ்லாத்தின் இத்தகைய போதனைகள் அன்னாரைக் கவர்ந்தன. அவர்கள் இஸ்லாத்தில் இணையும் தருணம் வந்தது. அவர்கள் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களிடம் சென்று தமது நம்பிக்கையை பிரகடனப்படுத்தினார்கள்.

## இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதற்காக ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கொடுமைக்கு இலக்காகுதல்

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட செய்தி விரைவாக மக்கமா நகரில் பரவியது. உமைய்யாவின் கோத்திரமாகிய ஜாமா இனத்து மக்கள், இந்நிகழ்வை தங்களது குலப் பெருமைக்கு ஓர் அவமானமாகக் கருதினர். உமைய்யா கடுங்கோபம் கொண்டான். 'எனது வீட்டில் இருக்கும் ஓர் அடிமை எவ்வாறு இஸ்லாத்தை ஏற்கவியலும்' என்று அவன் தன்னையே கடிந்து கொண்டான். இவ்விஷயத்தில் மிகவும் கடுமையாக நடந்து கொள்ளப் போவதாகவும், இரவு வருவதற்கு முன்னர், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இஸ்லாத்தில் கொண்டுள்ள நம்பிக்கை சிதறுண்டுபோவதை மக்கத்து மக்கள் காண்பார்கள் என்றும் உமைய்யா சூளுரைத்தான்.

இன்றைய காலத்து சில மதத் தீவிரவாதிகளைப் போன்று, மார்க்க விஷயங்களில் இரக்கமற்ற பலவந்தம் பயன்படுத்துவதை உமைய்யா ஆதரித்தான். அவன் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை மிகவும் கொடிய தண்டனைக்கு ஆளாக்கினான். அப்போதும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் தமது நம்பிக்கையில் உறுதியாக இருந்தார்கள். அன்னாரை சுட்டெறிக்கும் கடும் வெயிலில் வெளியே இழுத்துச் சென்று, கொதிக்கும் மணலில் கிடத்தி, பெரிய பாராங்கல்லை அன்னாரது நெஞ்சின் மீது ஏற்றி, ஓரிறைக் கொள்கையை மறுத்து கைவிட வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதை உமைய்யா வழக்கமாகக் கொண்டிருந்தான். சில சமயங்களில், உமைய்யா ஈவு இரக்கமின்றி சாட்டையால் அடிப்பான். தன்னால் இதற்கு மேல்



அடிக்கவியலாது என்ற நிலையை அடைந்து ஓய்ந்து போகும் வரை அன்னாரை சாட்டையால் தொடர்ந்து அடிப்பான். இவ்விதமாக நீடித்த, தாங்கமுடியாத சித்திரவதைகளினால், பல நேரங்களில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் நினைவிழந்து, மயக்கத்தில் வீழ்வார்கள். அன்னாருக்கு மீண்டும் நினைவு திரும்பும்போதெல்லாம், இந்த தண்டனை போதுமா? இப்போதாவது நம்பிக்கையை கைவிட்டு விட்டால் இன்னும் தரப்படும் கடும் வேதனையிலிருந்தும் தப்பித்துக் கொள்வீர் என்ற கடுஞ்சொற்களுடன் அவர்களிடம் கேட்கப்பட்டன. □ஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் வாயிலிருந்து அப்போது வந்த ஒரே பதில், 'அஹத், அஹத்' என்பது மட்டும்தான். 'ஒருவனே', 'ஒருவனே'. இறைவன் ஒருவனே என்பது இதன் பொருள்.

சில வேளைகளில், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மக்கத்து வீதிகளில் வீசி எறியப்பட்டு, தெருக் கும்பல்களின் வெறியாட்டங்களுக்கு இலக்காக்கப்பட்டார்கள். அக்கும்பல், அன்னாரது கழுத்தைச் சுற்றி கயிற்றால் கட்டி, கற்கள் நிறைந்த மக்கத்து வீதிகளில் இழுத்துக் கொண்டு செல்வர். கூரிய கற்கள் அன்னாரது உடலைக் கிழித்து இரத்தம் சொட்டும் நிலையிலும் அவர்கள் அந்த கொடியவர்களிடம் கருணை காட்டும்படிக் கோரவில்லை. அப்போதும், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் வாயிலிருந்து வெளிவந்த அந்த வழக்கமான ஒரே ஓசை 'அஹத் அஹத்' என்பது மட்டும்தான். அவ்வப்போது அவர்கள் அன்னாருக்கு கடுந்துன்பம் விளைவித்து அவர்களின் நம்பிக்கையை தொடர்ந்து சோதித்தனர். ஆனால், அன்னாரது மனஉறுதியையும், திடநம்பிக்கையையும் தகர்க்கவியலாது, அவர்களது முயற்சியில் படுதோல்வி கண்டனர். மிகவும் அறிதாக,

அவர்கள் தமது தந்திரத்தை மாற்றி, மென்மையான, அன்பான வார்த்தைகளைக் கொண்டும், ஆதரவான நடத்தைகள் மூலமும் அன்னாரது உள்ளத்தை வெற்றி கொள்ள முயன்றனர். மாலை வேளையில், அவர்கள் அன்னாரை சுற்றி அமர்ந்து, "பிலால் நம்முள் ஒருவராவார். இவரது தாயார் நமக்காக உழைக்கின்றார். இவர் எவ்வாறு நமக்கு எதிராக நடந்து கொள்வார்? நமது கடவுளர்களை எவ்வாறு இவர் அவமானப்படுத்த முடியும்? இவரது நடத்தை காரணமாக, மக்கள் நமது கோத்திரத்தை பரிகாசம் செய்வதை ஒருபோதும் இவர் விரும்ப மாட்டார்" என்று நாங்கள் உறுதிகொள்கிறோம் எனக் கூறுவர். பின்னர், அவர்கள் கூறியதனைத்தையும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் அவரை உற்று நோக்குவார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஒளிவீசும் கண்களுடன் அவர்களை நோக்கி, அமைதியாகக் கூறும் ஒரே வார்த்தை 'அஹத்', 'அஹத்' என்பது மட்டும்தான். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் இந்த பதிலைக் கேட்டதும், அவர்கள் அவரை திரும்பவும் வசைபாடத் தொடங்குவர். "ஏ இழிவான கறுப்பு அடிமையே! உனக்கு எவ்வளவு தைரியம் எங்களுடன் இப்படி நடக்க? நீ ஒன்றுமற்றவன். நாளை வரட்டும். நான் உனக்கு எப்படிப்பட்ட தண்டனை தரவிருக்கின்றேன் என்றால் அதைப் போன்ற ஒரு தண்டனையை, இதுவரை எந்த அடிமையோ அடிமையல்லாதவரோ கண்டிருக்க மாட்டார்கள்." என்று உமைய்யா கூச்சலிடுவான். மறுநாள் விடியும் போது, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மீண்டும் வேதனைமிக்க கொடிய துன்பத்திற்கு இலக்காவார்கள். சில வேளைகளில், இஸ்லாத்தின்



கொடிய எதிரியாகிய அபூஜஹ்லில், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை சித்திரவதை செய்வதில் இணைந்து கொள்வான். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், அனைத்து இன்னல்களையும் மகிழ்ச்சியோடு சகித்துக் கொண்டு மிக உறுதியாக உண்மையை கண்டு கொண்டதன் பின்னர், அதற்கு எதிரான நிலையை கைக்கொள்ள முடியாது எனக் கூறினார்கள்.

இத்தகைய மக்களின் கரங்களால், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கடுந்துன்பத்திற்கு இலக்காகி வருவதை அறிந்து, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், அவருக்காக பிரார்த்தனை செய்தார்கள். ஒருமுறை அன்னார் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள், "ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை, அவருடைய கொடிய எஜமானனிடமிருந்து வாங்கி விடுவிக்க என்னிடம் போதிய வழிவகை இருந்திருந்தால், நான் அவரை விடுவித்திருப்பேன்." இதனைச் செவியேற்ற ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட முதல் ஏழு நபர்களுள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் ஒருவராவார்கள். ஆரம்ப நாட்களில், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை ஏற்றுக் கொண்ட மக்கள் ஏழைகளாகவும், அடிமைகளாகவும் இருந்தனர். இத்தகைய அடிமைகளின் மக்களின் வாழ்வு, மக்கத்தினரால் மிகவும் துயரமிக்கதாக ஆக்கப்பட்டது. இவர்களனைவருமே இதுபோன்ற கடுமையான தண்டனைக்கு ஆளாயினர்: எனினும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அனுபவித்த கொடுமைகள் ஏராளம்...ஏராளம்.

முஸ்லிம்கள் இவ்வனைத்து இன்னல்களையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டனர்; ஏனென்றால், அவர்களது உள்ளம் இறைவனிடமிருந்து பெற்ற அன்றாட வாக்குறுதியினால் உறுதி மிக்கதாக இருந்தது.

## ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு விடுதலை கிடைத்தல்

ஒருநாள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை அவரது எஜமானன் உமைய்யா துன்புறுத்திக் கொண்டிருந்தபோது, □ஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவ்வழியே வந்தார்கள். அப்போது, மூன்று அல்லது நான்கு நபர்களால் தூக்கிவரப்பட்ட பெரும் பாராங்கல் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் மீது வைக்கப்பட்டது. அது வழக்கத்திற்கு மாற்றமான கடும் வெப்பமான பிற்பகல் நேரமாகும். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் எந்த அளவு கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்றால் இதற்கு மேல் அவர்களால் தாங்கிக் கொள்ள இயலாது; அதனால் உணர்விழந்து கீழே கிடந்தார்கள். "அவரது இறைவன் அல்லாஹ் என்று சொன்ன ஒரே காரணத்திற்காக நீ அவரை கொலை செய்கின்றாயா?" என்ற வார்த்தைகளால் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் உமைய்யாவை எச்சரித்தார்கள். பின்னர் அவர்கள் உமைய்யாவிடம், அவன் இந்த அடிமையை தமக்கு விற்க விரும்புகிறானா எனக் கேட்டார்கள். இந்த நிகழ்வு நடக்கும் சமயத்தில் அபூசு.ஃ.பியானும் உடன் இருந்தார். அவர், அடிமைக்கு தண்டனை கொடுத்துக் கொண்டிருக்கும் போது விற்பனை செய்வது, மக்கத்து வழக்கத்திற்கு மாற்றமான செயலாகும் என ஆட்சேபணை செய்தார். ஆனால் உமைய்யா அவரது பேச்சைத் தடுத்து "இந்த அடிமை ஒன்றுக்கும் உதவாதவன்.



இவன் இறந்துவிட்டதாக தெரிகிறது. அபூபக்கர் அவனது உடலை வாங்க விரும்பினால், அவ்வாறே செய்யட்டும்" என்றான். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் பணத்தை செலுத்தினார்கள். உமைய்யா அதற்கு சம்மதம் தெரிவிக்கும் சமயம், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் உடலில் சிறு அசைவைக் கண்டான். எனவே, பேராசை கொண்ட உமையா, விலையை உயர்த்தினான். அதற்கும் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் உடனடியாக ஒப்புக் கொண்டார்கள். பேரம் பேசி முடிக்கப்பட்டு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஐந்து வெள்ளிக் காசுகளுக்கு விற்கப்பட்டார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மீது வைக்கப்பட்டிருந்த பாராங்கல் இறக்கப்பட்டு, கட்டுகள் அவிழ்க்கப்பட்டதும், உமைய்யா ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களிடம் மிகவும் ஏளனமாகக் கூறினான், "இந்த துர்பாக்கியசாலியின் பொருட்டு, ஒரு வெள்ளிக் காசு கொடுத்திருந்தாலும் கூட நான் சம்மதித்து இருப்பேன்." அதற்கு பதிலடியாக ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், "உமைய்யாவே, நீ நூறு வெள்ளிக் காசுகளை கேட்டிருந்தாலும், அதற்கு நான் மகிழ்ச்சியோடு சம்மதித்திருப்பேன்" என்றார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இதுமுதல் ஒரு சுதந்திர மனிதரானார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டார்கள். எந்த அளவுக்கு பலவீனமாக இருந்தார்கள் என்றால், சுவாசித்தலும் கூட அன்னாருக்கு கடினமாக இருந்தது. மேலும் அவருக்கு நடந்தது என்ன என்பதும் அவருக்குத் தெரியவில்லை. ஐந்து நாட்கள் வரை, ஒன்றும் செய்ய முடியாதவர்களாக படுத்த படுக்கையாக இருந்தார்கள். அவர்கள் குணமடைவதற்கான

வலி நிவாரண மருந்து கொடுக்கப்பட்டது. இவ்விஷயங்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காய்ச்சல் குணமாகி அவர் ஆபத்தான நிலையிலிருந்து மீழும் வரை ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். ஆறாவது நாளில் அவர்களால் எழுந்திருக்க முடிந்தது.

## ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் சந்திப்பு

அடுத்த நாள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை சந்திக்கச் சென்றார்கள். நற்சுகத்துடன், விடுதலை பெற்ற மனிதராக ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைக் கண்ட ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கண்களில் ஆனந்த கண்ணீர் வழிந்தோடியது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை பேரன்புடன் கட்டித் தழுவி அவர்களை தமக்கு அருகில் அமரச் செய்தார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு இந்த அணுகுமுறை மிகவும் வினோதமாக இருந்தது. ஏனென்றால், ஓர் அடிமையாக அன்னார் இதுபோன்று மனிதாபிமான நடத்தைகளுக்கு பழக்கப்பட்டதே இல்லை. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அவருக்கு ஆறுதல் வழங்கி, இஸ்லாமிய போதனைகள் குறித்த மேலும் பல அறிவுரைகளைக் கூறினார்கள். ஹஸ்ரத் தூயநபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் "இஸ்லாம் என்றால் இறை விருப்பத்திற்கு முற்றாய் அர்ப்பணித்தல்; மேலும் ஒரு முஸ்லிம் எவ்வித இன, நிற, ஏழை, பணக்காரன் பேதமின்றி அனைத்து



மக்களுக்கும் நன்மைகள் செய்ய வேண்டும்." என்று போதித்தார்கள்.

## ஹஸ்ரத் பிலால் (ரலி) பயின்ற முக்கியமான பாடங்கள்

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் தொடர்ந்து வசித்து வந்தார்கள். அச்சுறுத்தும் அடியாட்கள் இல்லாத ஒரு வீட்டில் அன்னார் இருப்பது அவரது வாழ்நாளில் இதுவே முதன் முறையாகும். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களுள் ஒருவரான ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் மிகுந்த மென்மையுடனும், பரிவுடனும் திகழ்ந்தார்கள்.

ஒருமுறை, ஒரு பூனை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் காலை சுற்றிக்கொண்டு, அவரது பாதங்களை சுரண்டுவதை ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கண்டார்கள். அது பசியில் இருப்பதாகத் தோன்றியது. ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், ஒரு பாத்திரத்தில பாலை ஊற்றி அந்த பூனையை குடிக்கச் செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் பிராணிகளிடம் கூட காட்டும் இந்த இரக்க குணம் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. அவரது பழைய எஜமானனாக இருந்தால், அந்தப் பூனையை உதைத்துத் தள்ளியிருப்பான். இவ்வாறு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் சிறந்த வழிகாட்டல்களைக் கற்றுக் கொண்டார்கள்.

ஒருதடவை, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தம்மை விலைகொடுத்து வாங்கி சுதந்திர மனிதராக ஆக்கியதற்கு நன்றி கூறினார்கள். ஆனால்,

அவ்வாறு கூறுவதை தடுத்து நிறுத்தி, தமக்கு நற்செயலைச் செய்யும் இந்த நல்வாய்ப்பை வழங்கியதற்காக, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு தமது நன்றியை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தெரிவித்தார்கள். மேலும் அவர்கள், அடிமையை விடுவிப்பது அல்லாஹ்வை பெரிதும் மகிழ்விக்கின்ற செயலாகும் என ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஒருநாள், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம், அன்னார் கண்டிப்பாக எழுத படிக்க கற்றுக் கொள்ள வேண்டிய புதிய கடமை முன்னிருப்பதாகக் கூறினார்கள். பின்னர் அவர்கள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு கற்றுக் கொடுக்கவும் ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், மிகவும் ஆர்வத்துடன் எவ்வளவு அதிகம் கற்க முடியுமோ அந்த அளவுக்கு கற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் முஸ்லிம் சமுதாயத்தில் ஒரு பயனுள்ள உறுப்பினர் ஆவதற்கு கல்வி மிக அவசியம் என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

### முஸ்லிம்கள் மக்காவை விட்டு வெளியேறுதல்

மக்கத்து மக்கள், முஸ்லிம்களை நிம்மதியுடன் வாழ அனுமதிக்கவில்லை. முதலில் அவர்கள் முஸ்லிம்களை பெரிதாக பொருட்படுத்தாமல், அடிமைகளை மட்டும் துன்புறுத்தி வந்தனர். ஆனால், முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கிய போது, அவர்கள் பாரம்பரியமாக உருவாக்கியிருந்த சிலை வணக்கத்திற்கு இஸ்லாம் ஒரு மாபெரும் அச்சுறுத்தலாக இருப்பதை உணர்ந்து, அது மேலும் பரவுவதை தடுக்க



தம்மால் முடிந்தஅளவு அதிகபட்ச முயற்சிகளை மேற்கொண்டனர். முஸ்லிம்கள், அல்லாஹ் ஒருவன் என்றும், அவன் மட்டுமே வணக்கத்திற்குரியவன் என்றும் பிரகடனம் செய்ய அனுமதிக்கப படவில்லை. முஸ்லிம்கள் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய தூதர் ஆவார்கள் என்று கூறவும் அனுமதிக்கப்படவில்லை. இவ்வாறு பிரகடனம் செய்வது, அவர்களின் கடவுளர்களுக்கு பெருத்த அவமானம் என்றும், இதனால் அவர்களது மத உணர்வுகள் காயப்படுகிறது எனக் கூறி இத்தகைய கூற்றுகளுக்கு மக்கத்தினர் ஆட்சேபணை செய்தனர். முஸ்லிம்கள் தம்மை ‘முஸ்லிம்கள்’ என்று கூறுவதற்குக் கூட அனுமதிக்கப்படவில்லை. முஸ்லிம்கள் அவர்களின் தொழுகைகளை நிறைவேற்றவும் அனுமதிக்கப் படவில்லை. ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள், தமது வீட்டின் முற்றத்தில் ஒரு சிறிய பள்ளிவாசலைக் கட்டி, அங்கு தொழுது வந்ததாகவும், திருக்குர்ஆன் ஓதி வந்ததாகவும் கூறப்படுகிறது. அவர்களின் பெண்களும், குழந்தைகளும், சாதாரண மக்களும் திருக்குர்ஆனின் வசனங்களைக் கேட்டு பெரிதும் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர் எனக் கூறி மக்கத்தினர் இதற்கும் ஆட்சேபணை தெரிவித்தனர்.


முஸ்லிம்கள் மக்கத்தினரின் கொடிய எதிர்ப்பை சந்திக்க வேண்டியதிருந்தது. அவர்களுடைய வாழ்க்கை மிகவும் கஷ்டத்திற்கு உள்ளானது. அவர்களின் நம்பிக்கையை பிரகடனப்படுத்தியதற்காக, அவர்கள் அடித்துத் துன்புறுத்தப பட்டனர்; மக்கத்து வீதிகளில் கொலை செய்யப்பட்டனர். ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்களின் தாயாராகிய ஹஸ்ரத் சுமையா (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்காக முதல் உயிர் தியாகி

ஆனார்கள். அபூஜஹில் அவரை ஈட்டியால் குத்திக் கொன்றான். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களையும், மக்கத்தினர் விட்டு வைக்கவில்லை. அவர்கள் மீண்டும் மீண்டும் அவமதிக்கப் பட்டார்கள். தாக்கப்பட்டார்கள்; உடலில் காயப்படுத்தப்பட்டார்கள். அவர்களை கொலை செய்யவும் முயற்சிகள் செய்யப்பட்டன. ஒருமுறை, கஅபா ஆலயத்தின் பரந்த வெளியில் அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். சஜ்தாவின் நிலையில் இருந்த போது, இறந்த ஒட்டகத்தின் குடலை அபூஜஹிலின் தூண்டுதலினால் ஒருவன் அன்னாரது தோளில் வைத்து விட்டான். இதைக் கேள்விப் பட்டதும், அவர்களது ஒரு மகள் விரைந்து வந்து அதை நீக்கினார்கள். அதன் பின்னரே அன்னாரால் எழுந்திருக்க முடிந்தது. மற்றுமொரு சமயம், இதே போன்றே அன்னார் கஅபா ஆலயத்தின் அருகே தொழுது கொண்டிருந்த போது, உத்பா பின் அபி முயீத் என்ற பெயருடைய இஸ்லாத்தின் எதிரி ஒருவன், அன்னாரது கழுத்தை ஒரு துணியால் சுற்றி இறுக்கினான். அதனால், அவர்கள் சுவாசிக்க முடியாமல் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளானார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் விரைந்தோடி வந்து அன்னாரை அந்நிலையிலிருந்து காப்பாற்றினார்கள்.

கடுமையான அடக்குமுறையின் காரணமாக, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை மக்காவை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தினார்கள். முழுமனித இனத்திற்கும் தூதராக ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் நியமிக்கப்பட்ட ஐந்தாவது வருடத்தில், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் தாய்நாடான அபீசீனியாவிற்கு சில முஸ்லிம்கள் குடிபெயர்ந்து சென்றனர். அந்நாட்டை ஒரு சிறந்த, நேர்மையான கிறித்தவ



மன்னர் அப்போது ஆண்டு வந்தார். எனவே, முஸ்லிம்கள் அங்கு எவ்வித இடையூறுமின்றி இறைவனை வணங்க முடியும். இவ்வாறு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் சொந்த தேசம், அப்போது மிகுந்த அநீதிக்குள்ளான முஸ்லிம்களுக்கு ஒரு புகலிடமாகத் திகழ்ந்தது. அங்கு குடிபெயர்ந்த முதலாவது குழுவில், பதினோரு ஆண்களும் நான்கு பெண்களும் இருந்தனர்.




Trade route Arabian



A camel caravan crossing the desert



மக்கத்தினர்கள் இதை அறிந்த போது, அவர்களை விரட்டிச் சென்று, அவர்களைப் பிடித்து திரும்பக் கொண்டுவர ஒரு குழுவை அனுப்பினர். இந்தக் குழு செங்கடல் இருக்கும் தூரம் வரையிலும் சென்றது. ஆனால், முஸ்லிம்கள் அதற்குள் ஒரு கப்பலில் ஏறி பயணிக்கத் தொடங்கி விட்டனர். எனவே, மக்கத்தினர்கள் ஏமாற்றத்துடன் மக்கா திரும்பினர். பின்னர், மக்கத்தினர், அபிசீனியா நாட்டு மன்னரிடம், அகதிகளாக வந்தவர்களை அவர்களிடம் ஒப்படைக்குமாறு இசையச்செய்ய, ஒரு தூதுக் குழுவை அங்கு அனுப்பினர். ஆனால், மன்னர் தமது நிலைப்பாட்டில் மிகவும் உறுதியாக இருந்தார். மக்கத்தினர்கள் அவரை வற்புறுத்திய போதிலும் முஸ்லிம்களை அவர்களிடம் ஒப்படைக்க அவர் மறுத்து விட்டார். மேலும் அவர், முஸ்லிம்களை தன் ஆட்சியின் கீழ் எவ்வித அடக்குமுறையும் இன்றி வாழ அனுமதித்தார்.

## ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் யஸ்ரப் நகருக்கு இடம்பெயர்ந்து செல்லல்

மக்காவிற்கு வடக்கே சுமார் இருநூற்று ஐம்பது மைல் தொலைவிலுள்ள ஒரு நகரமான யஸ்ரப் நகரில் இஸ்லாம் பரவ ஆரம்பித்தது. ஒரு வருடம், யஸ்ரபிலிருந்து கஸ்ரஜ் கோத்திரத்தை சார்ந்த சில மக்கள் ஹஜ் செய்வதற்காக மக்கா வந்தனர். ஹஸரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அம்மக்களை சந்தித்து இஸ்லாத்தின் தூதுச் செய்தியை அவர்களுக்கு எடுத்துவைத்தார்கள். அன்னார் அவர்களிடம், இறைவன் ஒருவனே என்றும், வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு எவருமில்லை என்றும் கூறினார்கள். அவர்களுள் ஆறு பேர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் திரும்பிச்

சென்று, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களைப் பற்றிக் கூறினார்கள். அடுத்த வருடம், அவர்களுள் ஐந்து பேர் மீண்டும் மக்கா வந்தனர். அப்போது அவர்கள் மேலும் ஏழு பேரை தங்களுடன் அழைத்து வந்தனர். இந்த பன்னிரெண்டு நபர்களும் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் புனிதக்கரங்களில் பையத் செய்தனர். பின்னர், ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள், முஸாப் பின் உமைர் (ரலி) அவர்களை தப்லீக் செய்வதற்காக யஸ்ரப்க்கு அனுப்பி வைத்தார்கள். இவ்வாறு இஸ்லாம் யஸ்ரப்பில் தளிர்க்கத் தொடங்கியது. அடுத்த வருடம், எழுபது நபர்களைக் கொண்ட ஒரு குழு ஹஜ் செய்ய வந்தது. அவர்கள் அனைவரும் இஸ்லாத்தில் இணைந்தனர். யஸ்ரப்பில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கி விட்டதால், தொடர்ந்து இன்னல்களுக்கு ஆளான மக்காவாழ் முஸ்லிம்கள் சிறு குழுக்களாக, ரகசியமாக யஸ்ரப்புக்கு ஹிஜ்ரத் செய்யத் துவங்கினர்.

இவ்வாறு வெளியேறிய ஒரு குழுவுக்கு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்கள். அக்குழுவில், ஆறு ஆண்களும், இரண்டு பெண்களும், மூன்று சிறுவர்களும் இருந்தனர். அவர்கள் இருநூற்றைம்பது மைல் தூரத்தை பாலைவனத்தில் நடைபயணமாக கடந்து யஸ்ரப் செல்லத் தொடங்கினர். பயணம் மிகவும் கடினமாகவும், சில மக்கள் நோயுற்றிருந்த போதிலும், அல்லாஹ்வின் உதவியால் அவர்கள் பாதுகாப்பாக யஸ்ரப் வந்தடைந்தனர். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஸஆத் பின் கைஸ்மா (ரலி) அவர்களின் வீட்டில் தங்கினார்கள். படிப்படியாக, பெரும்பான்மையான முஸ்லிம்கள் மக்காவை விட்டு வெளியேறி யஸ்ரப் சென்றனர்.



ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள், அதுவரை மக்காவில்தான் இருந்து வந்தார்கள். இறுதியாக ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களையும் மக்காவை விட்டு வெளியேறுமாறு, இறைவன் கட்டளையிட்டான். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும் ரகசியமாக மக்காவை விட்டு வெளியேறி யஸ்ரப் நகரை நோக்கிச் சென்றனர். இந்த செய்தியறிந்து, மக்கத்து மக்கள் மிகுந்த ஏமாற்றத்துக்கு உள்ளாயினர். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களை பிடித்து திரும்ப கொண்டுவருபவருக்கு பெரும் வெகுமதிகள் வழங்கப்படும் என அறிவிப்பு செய்தனர். அதற்காக ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களையும், ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களையும் பின்தொடர்ந்து சென்று சிறைபிடித்து, இவர்களின் இரத்தத்தைக் குடிக்க தாகித்தவர்களாக இருந்த மக்கத்து தலைவர்களிடம் ஒப்படைக்கும் நோக்கில் பல குழுக்கள் தேடிச் சென்றன. யஸ்ரப் நகர முஸ்லிம்கள் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள், மக்காவை விட்டு வெளியேறி யஸ்ரப் வந்து கொண்டிருப்பதை அறிந்து, பேரார்வத்துடன் அன்னாரின் வருகைக்காகக் காத்திருந்தனர். இறுதியாக, அந்த நாள் வந்தது; அவர்கள் இருவரும் யஸ்ரப் நகரை நோக்கி வந்து கொண்டிருப்பதை அம்மக்கள் கண்டு கொண்டனர். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், ஏனைய வயதில் குறைந்த, முதிர்ந்த முஸ்லிம்களுடன் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களை வரவேற்பதற்காக ஓடிச்சென்றார்கள். ஹஸ்ரத் தூயநபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின், யஸ்ரப் நகரம், மதீனத்துன் நபி அதாவது நபியின் நகரம் அல்லது ‘மதீனா’ என சுருக்கமாக அழைக்கப்பட்டது.

## நம்பிக்கை கொண்டவர்கள் தொழுகைக்கு அழைக்கப்பட்டனர்

மதீனாவிற்கு வந்தடைந்த பின், முதலாவது பணியாக ஒரு பள்ளிவாயிலை கட்டுவதென ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் தீர்மானித்தார்கள். இதுவே ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களால், முதன் முதலில் கட்டப்பட்ட பள்ளிவாயில் ஆகும். நகரிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள புறநகர் பகுதியான 'கூபா' என்னுமிடத்தில், இப்பள்ளிவாயில் கட்டப்பட்டது. இப்பணியில் ஒவ்வொருவரும் சிறுவயதினரும் உதவி செய்தனர். இப்பள்ளியை மிக விரைவாக கட்டிமுடிப்பதற்காக அனைவரும் கடினமாக உழைத்தனர். அல்லாஹ்வுக்காகவும், அவனது தூதருக்காகவும் மகிழ்ச்சியுடன் இப்பணியை செய்தனர்.

பத்து நாட்களுக்கும் அதிகமாக 'கூபா'வில் தங்கி இருந்த பிறகு, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் மதீனா நகரத்திற்கு வருகை தந்தார்கள். மதீனாவிலும் கூட, பள்ளிவாசல் ஒன்றைக் கட்டுவதே அவர்களின் பிரதான எண்ணமாக இருந்தது. எனவே, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் அதற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். கூபாவில் பள்ளிவாயில் எவ்வாறு கட்டப்பட்டதோ, அவ்வாறு அன்னாரது சஹாபாக்கள் இப்போதும் கட்டிடம் கட்டுபவர்களாகவும், அதற்கான பணியாளர்களாகவும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். சில வேளைகளில், ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்களும் பணியில் இணைந்து கொண்டார்கள். இந்தப் பள்ளிவாசல் செங்கற்களாலும், கற்களாலும் கட்டப்பட்டது. ஒருநாள், ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களுடன் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அவர்கள் முஸ்லிம்களை தொழுகைக்கு அழைக்கும் பலதரப்பட்ட



முறைகளைக் குறித்து ஆலோசனைகள் செய்து கொண்டிருந்தனர். கிறித்தவர்களைப் போன்று மணி ஓசை எழுப்பலாம் என சிலர் கருத்து தெரிவித்தனர். மற்றுஞ்சிலர், யூதர்களைப் போன்று குழல் ஊதலாம் என்றனர். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களுள் ஒருவரான அப்துல்லா பின் சைத் (ரலி) அவர்கள் முன் வந்து, தாம் ஒரு கனவு கண்டதாகவும், அதில் ஒருவர் நம்பிக்கை கொண்டவர்களை தொழுகைக்கு அழைக்கப் பயன்படுத்திய வார்த்தைகள் தமது காதில் கேட்டதாகவும் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். பின்னர், தாம் தனது கனவில் கேட்டிருந்த வார்த்தைகளை அவர்கள் சொல்லிக் காட்டினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இதே கனவைக் கண்டிருந்தார்கள். இது தற்செயலாக நடந்த ஒரு சம்பவம் அல்ல. சந்தேகத்திற்கு இடமின்றி, இது இறைவனிடமிருந்து வந்த தூதுச் செய்தியாகும். எனவே, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களை தொழுகைக்கு அழைக்க இந்த முறையை ஏற்றுக் கொண்டார்கள். அன்னார் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை அழைத்து, இஸ்லாமிய வரலாற்றின் முதல் முஅத்தின் ஆக நியமித்தார்கள். இதைத் தொடர்ந்து, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் எழுந்து நின்று, அன்னாரது உரத்த கணீரென்ற குரலில் பாங்கு சொன்னார்கள்.



The Holy Prophet's Mosque



அல்லாஹ் மிகப் பெரியவன்; அல்லாஹ் மிகப் பெரியவன்;

அல்லாஹ் மிகப் பெரியவன்; அல்லாஹ் மிகப் பெரியவன்;

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை என்று நான் சாட்சி கூறுகின்றேன்;

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை என்று நான் சாட்சி கூறுகின்றேன்;

முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்று நான் சாட்சி கூறுகின்றேன்;

முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள் என்று நான் சாட்சி கூறுகின்றேன்;


தொழுகைக்கு வாருங்கள்; தொழுகைக்கு வாருங்கள்;

வெற்றி பெற வாருங்கள்; வெற்றி பெற வாருங்கள்;

அல்லாஹ் மிகப் பெரியவன்; அல்லாஹ் மிகப் பெரியவன்;

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை;

பாங்கின் அழைப்புக்கு பதிலளிக்கும் விதமாக, மக்கள் பள்ளிக்கு வருவதை கண்ட ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மேலும், இத்தருணமானது தனது வாழ்நாளின் மிக மகிழ்ச்சிக்குரிய தருணங்களில் ஒன்றாக எப்போதும் நினைவு கூறப்படும் என்றும் அறிந்திருந்தார்கள்.




A boy saying Adhan



இவ்வாறு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் முதல் முஅத்தினாக அறியப்பட்டார்கள். ஒருவேளை, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களால் பாங்கு சொல்லும் நேரம் பள்ளிக்கு வர இயலாமல் ஆகிவிட்டால், அபூமஹ்தூரா பாங்கு சொல்வார் என்றும், இவ்விருவரும் வரவில்லையென்றால், அம்ர் பின் உம்மே மக்தூம் (ரலி) அவர்கள் அப்பணியை செய்வார்கள் என்றும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

## பத்ர் போர்

மதீனத்து மக்கள் மிகுந்த நேசத்துடன் தமது நகரில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை வரவேற்றதையும், இஸ்லாம் மதினாவில் வாழும் கோத்திரங்களிடையே நன்கு பரவி வருவதையும் அறிந்து கொண்ட மக்கத்தினர்கள், மதீனா மீது தாக்குதல் நடத்த தீர்மானித்தனர். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மதீனா சென்றதிலிருந்து ஒரு வருட காலத்திற்குப் பிறகு, மக்கத்தினர்கள் போர்க்களத்தில் நல்ல அனுபவம் பெற்றிருந்த, போர் ஆயுதங்களுடன் கூடிய ஆயிரம் வீரர்களைக் கொண்ட ஒரு படையைத் திரட்டிக் கொண்டு, மதீனாவை நோக்கிப் படையெடுத்தனர்.




Battlefield of Badr

இந்த செய்தி ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களை வந்தடைந்த போது, அவர்கள் தமது மக்களுடன் ஆலோசனை நடத்தியதில், எதிரியோடு போரிட 313 பேரை மட்டுமே ஒன்று கூட்ட முடிந்தது. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் அவர்களில் ஒருவராவார். இவர்களில் பெரும்பாலோர் போர் நடவெடிக்கை களுக்கு தகுதியானவர்கள் அல்ல. அவர்களில் சிலர், இளம் வயது சிறுவர்கள் ஆவர். அவர்களிடம் போதிய ஆயுதங்களும் இல்லை. முழு படைக்கும் சேர்த்து, இரண்டு குதிரைகளும், சில ஒட்டகங்களும் மட்டுமே இருந்தன. முஸ்லிம்களுக்கும் நிராகரிப்பாளர்களுக்கும் இடையே நடக்கும் முதல் யுத்தம் என்பதால், சிறியவர் முதியவர் என ஒவ்வொரு முஸ்லீமும் தமது நம்பிக்கைக்காக தமது வாழ்வை அர்ப்பணிக்க ஆவலுடன் இருந்தனர். இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக மரணிக்கவும்



உறுதிபூண்டிருந்தனர். பகைவர்களை எதிர்கொள்ள, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் தலைமையில் முஸ்லிம்களின் படை நகரத்தை விட்டும் வெளியே வந்தது. படைகள் சந்தித்துப் போரிட்ட இடம் “பதர்” என அழைக்கப்படுகிறது.

போர் ஏறக்குறைய முடிவுற்று, மக்கத்தினர்களில் பெரும்பாலோர் சரணடைந்த போது, தம்முடைய முன்னாள் எஜமானனும், தாம் மாய்ந்து விடும் அளவுக்கு அடித்துத் துன்புறுத்தியவனுமான உமைய்யாவை, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் நேருக்கு நேர் சந்தித்தார்கள். உமைய்யாவும் அவரது மகனும் தப்பிக்க முடியவில்லை. உமைய்யா ஒரு முஸ்லிம் படைவீரரான அப்துல் ரஹ்மான் பின் அவ்.ஃப் (ரலி) அவர்களை பார்த்தார். தமது பழைய நட்பின் காரணத்துக்காக, தங்களுக்கு அடைக்கலம் நல்குமாறு உமைய்யா அவரிடம் கெஞ்சிக் கேட்டான். அப்துல் ரஹ்மான் பின் அவ்.ஃப் (ரலி) அவர்கள் உமைய்யாவின் வேண்டுதலுக்கு இசைய முன்வந்த போது, உமைய்யாவையும், அவரது மகனையும் விட்டுவிடக் கூடாது என்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் சப்தமிட்டு முஸ்லிம்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் இந்த முறையீட்டைக் கேட்ட முஸ்லீம் படைவீரர்கள் அவரது உதவிக்கு வந்தஉடன் உமைய்யா, அவரது மகன் ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர். முஸ்லிம்கள் இந்தப் போரில் வெற்றி பெறுவார்கள் என ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார்கள். உண்மையில், அன்னார் முன்னறிவித்த அனைத்தும், சற்றும் மாறாமல் அப்படியே நடந்தன. தூயநபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் கொடிய எதிரிகளின் பெயரைக் குறிப்பிட்டு. அவர்கள் முஸ்லிம்களைத் தாக்க

வருவார்களாயின், அவர்களது முடிவைக் கண்டு கொள்வார்கள் என முஸ்லிம்களிடம் ஏற்கெனவே கூறியிருந்தார்கள். உமைய்யாவும் அவர்களில் ஒருவனாக இருந்தான். அவன் இச்செய்தியைக் கேள்விப்பட்டு எந்த அளவுக்கு பயத்துடன் அடங்கிக் கிடந்தான் எனில், மக்கத்தினர்கள் மதீனாவிற்கு படையெடுத்துச் செல்லும் போது, அவன் தன் வீட்டில் இருக்க முடிவு செய்தான். அப்போது, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை துன்பப்படுத்தத் தூண்டிய உமைய்யாவின் நெருங்கிய நண்பனான உக்பா பின் அபி முயீத், உமய்யாவின் வீட்டிற்குச் சென்றான்; சில வளையல்களை அவன் முன்னால் தூக்கி எறிந்து, பரிகாசமான தொனியில் "உமக்கு நாசம் உண்டாகட்டும், ஒன்று, நீர் ஒரு ஆண்மகனாக இருந்தால், முஹம்மதுடனும், அவரைப் பின்பற்றுவோருடன் போரிடப் புறப்படு; அல்லது இந்த வளையல்களை அணிந்து கொண்டு பெண்களைப் போன்று வீட்டிலேயே இருந்து கொள்." என்றான் உமைய்யா அவனை சபித்தவனாக, மரணம் தனக்காக காத்திருக்கிறது என்பதை அறியாதவனாக வேண்டாவெறுப்புடன் மக்கத்து படையுடன் இணைந்து கொள்ள வெளியேறினான். உக்பா பின் அபி முயீதுவும் இந்தப் போரில் கொல்லப்பட்டான்.

## முஸ்லிம்கள் வெற்றியுடன் மக்காவில் நுழைதல்

மேலும் சில ஆண்டுகள், மக்கத்தினரும், மதீனத்து முஸ்லிம்களும் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இவ்வனைத்துப் போரிலும் பங்கேற்றார்கள். இறுதியாக 'போர் நிறுத்தம்' செய்ய ஒப்புக் கொள்ளப்பட்டது. இதுவே ஹுதைபியா போர் நிறுத்த உடன்படிக்கை என்றழைக்கப்படுகிறது. பத்தாண்டு காலம்



போர்புரியக் கூடாது என இரு தரப்பும் ஒப்புக்கொண்டது. ஆனால், இரண்டு ஆண்டுகள் மட்டுமே கழிந்த நிலையில், இந்த உடன்படிக்கையை மக்கத்தினர் மீறினர். எனவே, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தமது மக்களுடன் மக்காவை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்கள் மதீனாவை விட்டு வெளியே வந்த போது, பல்வேறு மற்ற முஸ்லிம் கோத்திரங்களும் அவர்களுடன் இணைந்து கொண்டன. சில நாட்கள் பயணத்திற்குப் பின் அவர்கள் ∴பாரான் பள்ளத்தாக்கை அடைந்தனர். பின்னர், மக்காவின் எல்லைக்கு வெளியில் அமைந்துள்ள மர்ரோஸ் சஹ்ரான் என்ற இடத்தில் முகாமிட்டுக் கொண்டனர். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் தலைமையிலான முஸ்லீம்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தை எட்டியது. முஸ்லிம்களின் படை மக்காவை அடைந்த செய்தி கிட்டியதும், மக்கத்துத் தலைவரான அபூசு∴பியான் நிலவரத்தையும், முஸ்லிம்களின் படை பலத்தையும் தாம் நேரடியாக அறிந்து கொள்ள மக்காவை விட்டு வெளியேறினார். அவர் கண்ட காட்சி அவரது மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே, அவர் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை சந்திக்கத் முடிவு செய்தார். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையார் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் துணையுடன், அவர் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை சந்தித்தார். ஆவர் தூயநபி (ஸல்) அவர்களிடம் மக்கத்துவாசிகள் முஸ்லிம்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தாமல் இருந்தால், அவர்களுக்கு 'பொது மன்னிப்பு' வழங்கப்படுமா என்று வினவினார். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஆம்; வீட்டினுள் இருக்கும் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும். மேலும் அபூசு∴பியானின் வீட்டில் யார்யார்

அடைக்கலம் புகுந்தார்களோ அவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும். தமது ஆயுதங்களை கீழே போட்டு விடுபவர்களுக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும்." என்று கூறினார்கள்.

மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த பிறகு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் சகோதரராக, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களால் பிரகடனம் செய்யப்பட்ட அபூ ருவாஹா (ரலி) அவர்கள் கையில் ஒரு கொடியை கொடுத்து கூறினார்கள்: "இது பிலால் உடைய கொடியாகும். இந்த கொடியின் கீழ் வருபவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும்."

பின்னர், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் இந்தக் கொடிக்கு முன்பாக அணிவகுத்துச் செல்லுமாறும், இது குறித்து அறிவிப்பு செய்யுமாறும் கூறினார்கள். அடிமையாக இருந்து, இஸ்லாத்தில் நம்பிக்கை கொண்ட காரணத்திற்காக, மக்கத்தினரால் துன்புறுத்தப்பட்டு, அவமானப் படுத்தப்பட்டு, இழிவுபடுத்தப்பட்ட ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், அந்நாளில் தமது பெயரால் அமைதியின் கொடி தரப்பட்டிருப்பதை எண்ணி பெருமிதம் அடைந்தார்கள். இவ்வாறு ஒரு சண்டையுமின்றி, எவ்வித மோசமான இரத்தம் சிந்துதலுமின்றி முஸ்லிம்கள் மக்கமா நகரில் வெற்றியுடன் நுழைந்தனர். அந்நாளில், கொடுமை இழைத்த பலரும் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் கொடியின் கீழ் அடைக்கலம் புகுந்தனர்.



## கஃபத்துல்லாவிலிருந்து பாங்கின் அழைப்பு

மக்காவில் நுழைந்ததும், ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்கள் நேராக இறை இல்லமான கஅபா ஆலயத்திற்கு சென்றார்கள். கஅபா ஆலயத்தை சுற்றிவருதலை நிறைவேற்றினார்கள். கஅபா ஆலயத்திற்குள் இருக்கும் சிலைகள் அழிக்கப்பட வேண்டும் என உத்தரவிட்டார்கள். ஒவ்வொரு சிலையும் உடைந்து விழும்போதும், "உண்மை வந்துவிட்டது. பொய் ஓடிவிட்டது. பொய்யானது ஓடிவிடக் கூடிய ஒன்றேயாகும்." (17:82) என்ற திருக்குர்ஆனின் வசனத்தை ஓதினார்கள். இவ்வாறு, கஅபா ஆலயம் எதற்காக உருவாக்கப்பட்டதோ அந்த உண்மை நோக்கமாகிய ஓரிறைவனை மட்டும் வணங்குவதற்காக மீட்கப்பட்டது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் கஅபா ஆலயத்திற்குள் சென்று தொழுதார்கள். அப்போது, ஹஸரத் பிலால் (ரலி) அவர்கள் வாசலில் பாதுகாவலராக நின்று கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் குறைஷி தலைவர்களை அழைத்து வரச்சொல்லி, அவர்களுடன் அன்னார் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் தூயநபி (ஸல்) அவர்களிடம் தாங்கள் பரந்த உள்ளம் கொண்ட சகோதரர் என்று எங்களுக்குத் தெரியும்; அதன்படியே நடந்து கொள்ள வேண்டும் எனப் பதிலளித்தனர். இந்த வேண்டுதலை ஏற்று, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், அனைவரும் சுதந்திரமாக விடுவிக்கப்படுவர் எனக் கூறியதுடன், 'இன்றைய தினம் உங்கள் மீது எந்த விதமான குற்றச்சாட்டும் இல்லை.' என மொழிந்தார்கள்.



The Holy Ka'aba

இரண்டு மக்கத்துத் தலைவர்கள் கஅபா வளாகத்திற்குள் இருந்தனர். அப்போது ஏற்கெனவே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அபூசு.ஃ.பியான் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அத்தாப் பின் உசைத், ஹாரிஸ் பின் ஹிஷாம் என்பது அவர்களது பெயர்களாகும். அவர்கள் கஅபா ஆலயத்திலுள்ள சிலைகளை, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அப்புறப்படுத்திக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர் முக்கிய அறிவிப்புகள் செய்து கொண்டிருப்பதையும் அவர்கள் செவிமடுத்தார்கள். கைஅளவு பேரீத்தம் பழங்களுக்காக தனது எஜமானனின் ஆட்டு மந்தைகளை மேய்க்கும் ஒரு சாதாரண அடிமையாக மட்டுமே ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியும். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, அவர் சுதந்திரமான மனிதர் மாத்திரம் அல்ல; நம்பிக்கைக்குரிய உயர்பதவியும் அதிகாரமும் அவருக்கு கொடுக்கப்பட்டு விட்டன.



இஸ்லாத்தின் அன்பு மற்றும் அமைதி நிறைந்த தூதுச் செய்தியானது, சமுதாயத்தில் பாரம்பரிய சீர்கேட்டை எவ்வாறு அடியோடு அகற்றி, அனைத்து மக்களுக்கிடையில் சகோதரத்துவத்தை உருவாக்கி விட்டது என்பதை அந்த இருவரும் அப்போது நேரடியாய் கண்டனர். எனவே, அவர்கள் இஸ்லாத்தை ஏற்க முடிவு செய்தனர்.

தொழுகைக்கான நேரம் வந்த போது, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்கள் பாங்கு -தொழுகைக்கான அழைப்புவிடுக்குமாறு கூறினார்கள். இந்த நிகழ்வு, ஹஸ்ரத் இப்ராஹிம் (அலை) அவர்களால் கட்டப்பட்ட இந்த இறைவணக்கத்திற்கான இல்லம், அல்லாஹ்வை மட்டும் வணங்கும் உண்மை நோக்கத்திற்காக மீட்கப்பட்டு விட்டது என்பதை மக்களுக்குக் காட்டியது. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கஅபா ஆலயத்தின் கூரையில் ஏறினார்கள். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களும், ஆயிரக்கணக்கான முஸ்லிம்களும் பாங்கோசையை கேட்பதற்காக காத்துக் கொண்டிருப்பதைக் அன்னார் கண்டார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் தனது உள்ளத்தில் உணர்ச்சி பொங்க தொழுகைக்காக அழைப்பை விடுத்தார்கள்.

## ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் பணிகள்

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டார்கள். அபூ அப்துல்லாஹ், அபூ அப்துல் கரீம், அபூ அப்துர் ரஹ்மான், அபூ அம்ர் ஆகியவை பொதுவாக அறியப்பட்டவை. அன்னாருக்கு காலித் என்ற சகோதரரும், க.ஃ.பாரா என்ற சகோதரியும் இருந்தனர். க.ஃ.பாரா ஓர் அடிமைப்

பெண்ணாக உமர் பின் அப்துல்லா்வின் வீட்டில் வேலை பார்த்து வந்தார்.

ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களால், சொர்க்கம் செல்லக் கூடியவர்கள் என நற்செய்தி வழங்கப்பட்ட நபர்களுள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் நற்பாக்கியம் பெற்ற ஒருவராவர். ஒவ்வொரு தொழுகைக்கான வேளையிலும் பாங்கு சொல்வதுடன், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் பொருளாதார விவகாரங்களையும் கவனித்துக் கொண்டார்கள். மேலும், அன்னார் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களுடைய விருந்தினர்களுக்கு பணிவிடை செய்வதுடன், தூயநபி(ஸல்) அவர்களுக்காக சந்தையிலிருந்து பொருட்கள் வாங்கும் பொறுப்பையும் கவனித்து வந்தார்கள். ஒவ்வொரு தொழுகைக்கும் பாங்கு சொல்லி முடித்தவுடன், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் வீட்டிற்குச் சென்று, கதவைத் தட்டி, தொழுகைக்கான நேரம் வந்துவிட்டதை தெரியப்படுத்துவார்கள். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் தமது வீட்டிலிருந்து வெளிவந்தவுடன், அன்னாருடன் இணைந்து பள்ளிக்கு வருவார்கள். தொழுகைக்காக ஆயத்தமாக நின்றவுடன், தொழுகை ஆரம்பமாகிறது என்பதை உணர்த்தக் கூடிய, பாங்கின் சுருக்கமான 'இகாமத்' சொல்வார்கள். பின்னர் ஜமாஅத்தான தொழுகையை நிறைவேற்றுவார்கள்.

ஒருமுறை அபிஸீனிய மன்னர் மூன்று அழகிய நீண்ட ஈட்டிகளை ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களுக்கு பரிசாக வழங்கினார். ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள், அவற்றில் ஒன்றை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் மற்றொன்றை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கும் கொடுத்து விட்டு,



ஒன்றை தமக்காக வைத்துக் கொண்டார்கள். எப்போதும் திறந்தவெளியில் நடக்கும் ஈத் பெருநாள் தொழுகை நடத்துவதற்காக அன்னார் வெளியே வரும்போது, அவர்கள் அதை ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் ஒப்படைப்பார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அதை தமது கைகளில் பிடித்துக் கொண்டு, ஈத் தொழுகை நடைபெறும் இடத்திற்கு, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களுக்கு முன்பாக அணிவகுத்துச் செல்வார்கள்.

## ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் இறுதி நாட்கள்

ஒரு நாள் காலையில் சுபுஹ் தொழுகைக்கு முன்னர், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு அன்னாரை எழுப்புவதற்காக வழக்கம்போல் சென்றார்கள். அப்போது, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். ஆனால், உடல்நலம் குன்றியிருந்தார்கள். பள்ளிவாசலுக்கு மெதுவாக நடந்து வந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை உதவிக்காகப் பிடித்துக் கொண்டார்கள். அடுத்து இரண்டு நாட்களில் அன்னாருக்கு காய்ச்சல் வந்தது. அப்போதும் கூட அவர்கள் பள்ளிவாசலுக்கு வந்து தொழுகை நடத்தினார்கள். ஆனால், அவர்கள் மிகவும் பலகீனமாக இருந்தார்கள். அவர்களது குரலில் தளர்ச்சி தெரிந்தது. ஐந்தாவது நாள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அன்னாரை அழைக்கச் சென்ற போது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் குடிப்பதற்கு கொஞ்சம் குளிர்ந்த தண்ணீர் கொண்டு வருமாறு ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஆழமான,

மிகவும் குளிர்ந்த நீர் கிடைக்கும் கிணற்றுக்குச் சென்று தண்ணீர் எடுத்து, அதை ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களிடம் கொடுத்தார்கள். பின்னர் அவர்கள் பாங்கு சொல்வதற்கு சென்று விட்டார்கள். பல நாட்களாக ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் மிகவும் நோயுற்றவர்களாக படுத்திருந்தார்கள். சில வேளைகளில் மயக்கமுற்று விடுவார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், அன்னாரது வீட்டு வாசல் அருகே அன்னாருக்கு எப்போது தேவைப்பட்டாலும் பணிவிடை செய்ய தயார் நிலையில் இருந்தார்கள்.

கி.பி 632, மே மாதம் 26 வது நாள், ஹிஜ்ரி பத்தாம் ஆண்டு, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் தனது இன்னுயிரைத் துறந்தார்கள். மதீனாவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். மற்றனைத்து முஸ்லிம்களைப் போன்று, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் பெருந்துயருற்றார்கள். தங்களது அன்பிற்குரிய ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் மறைவால், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏற்பட்ட பேரிழைப்பையும், பெருந்துயரத்தையும் வார்த்தைகளால் விவரிப்பதென்பது இயலாததாகும்.

### ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் இறுதி பாங்கு

ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் மறைவிற்குப் பிறகு, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களால் பாங்கு சொல்ல இயலவில்லை. அவர்கள் முயற்சி செய்த போதிலும், முஹம்மது (ஸல்) அவர்களின் பெயரை உச்சரித்தவுடன் அவர்கள் மனம் நெகிழ்ந்து கண்ணீர் விடுவார்கள். அதற்குமேல் அவர்களால் தொடர முடியாமல் போய்விடும்.



சிறிது காலம் கழித்து, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சிரியா செல்வதற்கு அனுமதி கோரினார்கள். மக்களுக்கு இஸ்லாத்தை போதித்த வண்ணம், தமது மீதமுள்ள வாழ்க்கையை அன்னார் சிரயாவில் கழித்தார்கள். அவ்வப்பொழுது அவர்கள், மதீனா வருவார்கள். ஒவ்வொருமுறை அன்னார் மதீனா வரும்போதும், அன்னாருக்கு மிகவும் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அன்னாரை, 'செய்யதுனா' அதாவது 'எங்கள் தலைவர்' என்று அழைத்து வந்ததாக கூறப்படுகிறது.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் அதன் பின்னர் தமது வாழ்வில் இரண்டு தடவைகள் மட்டுமே பொது வெளியில் பாங்கு சொல்லியுள்ளார்கள். ஒருமுறை முஸ்லிம்கள் டமாஸ்கஸை வெற்றிகொண்ட பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியாவுக்கு பிரத்யேக வருகை புரிந்த போது, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைக் பாங்கு சொல்லுமாறு கேட்டுக் கொண்டார்கள். அன்னாரது வேண்டுதலை ஏற்று, ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் பாங்கு சொன்னார்கள்.

மற்றொரு முறை, அவர்கள் மதீனாவில் ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களது அடக்கஸ்தலத்தை பார்க்க வந்த போது, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் பேரப் பிள்ளைகள் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களும், அன்னாரை பாங்கு சொல்லுமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டனர். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களால் அவர்களிடம் மறுப்பு தெரிவிக்க இயலவில்லை. அவர்கள் சுபுஹ் தொழுகைக்காக பாங்கு சொன்னார்கள். அப்போது, ஹஸ்ரத்

பிலால் (ரலி) அவர்கள் தங்களை தொழுகைக்கு அழைக்கும் குரலைக் கேட்டு, மதீனத்து வீதிகளில் மக்கள் உணர்ச்சி பொங்க கண்ணீர் மல்க பெருந்திரளாகக் கூடிவிட்டனர்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்கள் வ.்.பாத் ஆகி 12 ஆண்டுகளுக்குப் பிறகு, கி.பி 644 ஆம் ஆண்டு சிரியாவில் மரணமடைந்தார்கள். சில வரலாற்று ஆசிரியர்கள், அன்னார் 70 வயதாகும்போது மரணமடைந்ததாகக் கூறுகிறார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எந்த அளவு உயர்ந்த மதிப்பில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை வைத்திருந்தார்கள் என்றால், அவர்கள் மரணித்த வேளையில் "இன்று முஸ்லிம்கள் தமது தலைவரை இழந்து தவிக்கின்றனர்." எனக் கூறினார்கள்.